*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com*
***தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்***
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
*பகுதி V, பதிப்பு 13 - ஏப்ரல் 2018*
*UGC Approved Journal (64089), © Author*

# சங்ககாலச் சமூகத்தின் கல்வி நிலை

**முனைவர்.ஆ.சத்தியராஜ்**
தமிழ் கல்வியியல் உதவிப் பேராசிரியர்
காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம், காந்திகிராமம்

## முன்னுரை

*மனிதனின் வாழ்நிலையைத் தீர்மாணிப்பது கல்வியே. கல்வி என்பது கற்றல் படிப்பு என்னும் செயல்பாட்டினை அறிந்து அவற்றினைப் பயன்பாட்டினாலும் தன்னுடைய அனுபவத்தினாலும் வெளிப்படுத்துவது கல்வி. கற்றல் என்னும் போது கேட்டல், எழுதுதல், படித்தல், பேசுதல் ஆகிய திறன்களில் சிறப்பு வாய்ந்ததாகக் கொள்ளப்படுவதாகும். படிப்பதோடு சுய அனுபவத்துடன் உலகியலறிவைச் செயல்வடிவம் பெற்றுத் தருவது கல்வியாகும்.*

### கல்வியாளர்களின் கருத்து

"கல்வி என்பது இயற்கையாக மனிதனுள்ளே புதைந்துள்ள தெய்வீகமான பூரணத்தை வெளிக்கொணர்வதாகும்" என சுவாமி விவேகானந்தர் கூறுகிறர். (மீனாட்சி சுந்தரம் மலரும் இந்திய சமுதாயத்தில் கல்வி ப.66)

கல்வி என்பது வெறுமனே அறிவை மட்டும் வளர்ப்பதற்குப் பயிற்சியளிக்கக் கூடாது. மாறாக உன்னதமான மனிதப் பண்புகளை பயிற்றுவிப்பதாகவும், முன்பை விட சிறப்புடையதாகவும், மனம், ஒழுக்கம், வாய்மை, இவற்றை உருவாக்குவதாகவும் இருக்க வேண்டும் எனதாகூர் கூறுகிறார்.

"கல்வி என்பது குழந்தை மற்றும் மனிதனின் உடல், உள்ளம், ஆன்மா இம்மூன்றின் சிறப்பானவைகளை ஒட்டு மொத்தமாக வெளிக் கொணர்வதாகும். என மகாத்மா காந்தியை கூறுகிறார்.

### தொல்காப்பியம்

தமிழிரின் மூத்த நூல் முதல்நூல் எனும் பெருமையைப் பெற்ற நூல் தொல்காப்பியம் மொழிக்கு முதன்மையான எழுத்தும் அதைக் கொண்டு படைக்கும் சொல்லும் கூற முனைந்த தொல்காப்பியனார். 'கல்வி' பற்றிய குறிப்பை கூறவில்லை இருப்பினும் கல்வி கற்பதற்கான தொடக்க செயல்பாடுகள் என்பது தெளிவாகிறது. பொருளதிகார அகத்திணை இயலில் பிரிவை விளக்கும் நோக்கில் முதலாவதாக கல்வியை முன்னுறுத்துகிறார்.

"ஓதல் பகையே தூதிவை பிரிவே " (தொல். களம் நூல் 25)

இங்கு ஓதல் என்பது கல்வி. கல்வி கற்கும் பொருட்டு பிரிதல் தமிழர் சமூக மரபு என்பதை நூற்பாவழி விளங்குகிறது.

கல்வி கற்கச் செல்பவன் எவ்வளவு ஆண்டு சென்று கற்க வேண்டும் என்பதை,

"வேண்டிய கல்வியாண்டு மூன்றறிவாது" (கற்பு 188)

இந்நூற்பாவில் தலைவன் தலைவியைப் பிரிந்து சென்று மூன்று ஆண்டுகள் தங்கிக்கல்வி கற்றான். இக்கல்வி அடிப்படை கல்வியாக இருக்க முடியாது. அஃது உயர்கல்வியாக மட்டுமே இருக்க முடியும். உயர்கல்வியின் தேவையை அன்றைய சமூகத்தினர் உணர்ந்திருந்தனர் என்பது தெளிவாகிறது என்று இன்றைய உயர் கல்வியான கல்லூரிக் கல்வியின் மூன்றாண்டு காலத்தை இதனோடு ஒப்பு நோக்கலாம்.

மெய்ப்பாட்டை எண்வகையாக வகைப்படுத்திய தொல்காப்பியர் "பெருமிதம்" எனும் சுவையர் கூறும் போது கல்வியை முதன்லாவதாக முன்னிறுத்தியுள்ளார்.

"கல்வி தறுகண் புகழ் கொடையெனச்
சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே" (தொ.மெய்.9)

இவ்வாறு தொல்காப்பியர் விளத்தியிருப்பது 'கல்வி' குறித்து நம்மையும் பெருமிதம் கொள்ளச்செய்கின்றன.

**புறநானூற்றில் கல்வி நிலை**

சங்க இலக்கியத்தில் எடுத்தாளப்பட்ட சான்றோர் சான்றாண்மை போன்ற சொற்கள் கல்வியில் சிறந்தோரை மையமாக முகிழ்ந்து எனலாம். கற்றோரே சான்றோர் இருந்தால் பிணி மட்டுமல்ல நரையும் தோன்றாது என்று பிசிராந்தையார் தம் பாடலில் விளக்கியுள்ளார்.

"யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டலென் மனைவியொடு.....
சான்றோர் பலர்யான் வாழுமூரே
" (புறம். 191)

என்று பாடுகின்றார். நல்ல சமுதாயம் சான்றோரைக் கொண்டு அடையாளம் காணப்படுகிறது. சான்றோன் ஆவதற்குக் கல்வியே துணை என்பதை அரியப்படை கடந்த நெடுஞ்செழியன் (புறம் 183) கல்வியால் ஒருவன் எவ்வளவு மேன்மை அடைகிறான் என்பதை,

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போ ரன்ன உடன் வயிற்ளு உள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவன் அவன் கண்படுமே"

எனும் புறநானூற்றுப் பாடல் வாயிலாக கால மன்னன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

உணர்த்துகின்றான். "ஆசிரியருக்கு வேண்டும் உதவிகளைச் செய், அவருக்குத் தேவையானதைக் கொடு. செல்வக்குடியில் பிறந்து இதைச் செய்வதோ எனக் கல்வியை ஒதுக்காதே" கல்வியின் இன்றியமை யாமையை மன்னன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாடலில் சுட்டப்படுகிறது. அறத்தின் மேன்மையை உணர்ந்தவர் பண்டைத்தமிழர். எனவே, அவர்கள் அறவழிப் பொருளையும் அறவழி இன்பத்தையும் பெறவேண்டும் என்ற கொள்கையுடையராக வாழ்ந்தனர்.

கல்வியின் சிறப்பறிந்த, ஆரியப்படை, கடந்த நெடுஞ்செழியன் கல்வி கற்பதன் அவசியத்தையும் கல்வியினால் ஏற்படும் புரட்சியினையும் எடுத்துக்காட்டி யுள்ளார். வயிற்றில் பிறக்கும் அனைத்துக் குழந்தைகளையும் ஒரே கண்ணோட்டத்துடன் பார்க்கும் தெய்வத் தன்மை கொண்ட தாயாவாள். உயர்ந்த பண்பாளனாக இருந்தாலும் தீங்கையும் கொடூரங்களையும் புரிபவனாக இருந்தாலும் தாயின் பாசம் இருவருக்குமே சமமாக இருக்கும் பலரையும் பக்குவத்துடன் அரவணைத்துச் செல்லும் தாயின் மனம் கூட கல்வியின் தன்மையால் மாறுபடக் கூடும் என்பதை கல்விச் சிறப்பாக சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும்" என புறநானுறு கல்வியின் சிறப்பை எடுத்தியம்புகிறது.

பொன்னும் பவளமும் முத்துப் மணியும் ஒன்றுக்கொன்று தொலைவுப்பட்ட நிலத்தில் தோன்றினாலும் அணிகலன் என்று வரும் பொழுது அவை அணிவகுப்பது போல் சான்றோர் எங்கு இருப்பினும் தமது இனத்தை (கற்றவர்) எப்போதும் சென்று சேர்வர் என்பதை,

சான்றோரிருந்து அவையத்து உற்றோன்
ஆசாகுஎன்னும் பூசல் போல (புறம்.266)

என்று புறப்பாடல் விளக்குகின்றது. தம்மால் சமூகத்திற்குப் புகழ் எனில் தமது உயிரையும் கொடுப்பர் கற்றறிந்த சான்றோர். ஆனால் பழி எனில் பரிசாக உலகமே கிடைப்பினும் ஏற்பதில்லை என்பதும் அவர்தம் கொள்கை என்பதை,

புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் (புறம்.182)

என்று புறபாடல் விளக்குகின்றது.

தெய்வப் புலவரும் சான்றோன் சிறப்பைக் கூறுமிடத்து

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோhன் எனக்கேட்ட தாய்" (குறள்.69)

என்ற குறளின் வழியாக ஈன்ற மகன் உலகில் பல்திறனும் வாய்க்கப் பெற்ற சான்றோனாவதையே ஈன்றாளும் விரும்புவாள் எனச் சான்றோன் சிறப்பைக் கூறுகிறார்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் கல்வி அறிவை பெறவேண்டும். இல்லையேல் மாக்களோடு ஒப்பிடும் நிலைவை தெளிவுப்படுத்துகின்றது.

"கல்விகற்காத மக்கள் மாக்கள் நிலைக்குத்
தள்ளப்பட்டதைப் புறநானூற்றுப் பாடல்
எல்லடிப் படுத்த கல்லாக் காட்சி
வில்லு ழுது உண்மார் நாப்பண்
ஒல்லென" (புறம்.170)

எனும் வரிகள் மூலமாக விளக்குகிறது.

**கல்வியும் கற்றோர் சிறப்பும்**

கற்றவர்களின் சிறப்பை அவர்தம் படைப்பிலிருந்து நாம் அறிந்து கொள்வது போல், அவரும் தம் படைப்பில் கற்றவர் சிறப்பைக் கூறிக் கல்வி கற்கும் நல் எண்ணத்தை அன்றைய சமூகத்தில் விதைதனர் அவ்விதையே இன்று விருட்சமாக வளர்ந்து தமிழர்தம் கல்வி அறிவின் விழுதுகளாகச் சமூகத்தில் நிலைகொண்டுள்ளன. இதனை,

"ஓங்கிய சிறப்பினுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக" (புறம். 72)

புலவர் புகழ்ந்து பொய்யா நல்லிசை
விரிகதிர் ஞாயிறு" (புறம். 228)
பாணா
........ புலவர்
பாடியினாப் பண்பிற் பகைவர்" (120)

"ஈன்ற தாயே வேண்டாளல்லள்
கல்வியெனும் வல்லான் சிறா அன்"

என்று புறநானூற்றுப்பாடல்கள் மூலம் உணர முடிகிறது. கற்பிப்போன் எத்தகைய தகுதிகளைக் கொண்டிருந்தால் இச்சமூகம் அவனை 'நல்லாசிரியன்' என இவ்வுலகிற்கு அடையாளப்படுத்தும் என்பதையும் சங்கப் பாடல்கள் வெளிப்படுத்த தவறியதில்லை என்பதை,

"துகளறு கேள்வி யுயர்ந்தோர் புக்கில்
அனைய னென்னா தத்தக் கோனை" (221)

என்ற புறப்பாடலில் அறியமுடிகிறது.

கல்வி கேள்வி மட்டுமல்லாது சங்கத் தமிழர் தொழில் மற்றும் அறிவியல் கல்வியிலும் சிறந்து விளங்கினர் என்பதற்கு அவர்தம் கலைப்படைப்பே சான்றாகிறது.

**முடிவுகள்**

1. சங்க காலத் தமிழ்ச் சமுதாயத்தின் கல்வித் தேடலை அறியமுடிகின்றது.
2. எண் வகை மெய்ப்பாட்டைச் சுட்டும் தொல்காப்பியர் 'பெருமிதம்' என்னும் மெய்ப்பாட்டின் நிலைக்களன்களில் முதன்மையாகக் கல்வியை முன்னிறுத்துகின்றார்.
3. ஈன்ற தாயும் தந்தையும் மட்டுமன்றிச் சுற்றத்தாரும் ஏனையோரும் கல்வி கற்றுப் புலமை பெற்றவனையே விரும்பினர் என்பதற்குச் சங்க இலக்கியப் பாடல்கள் சான்றாகின்றன.

கல்வி அறிவு பெறாத மக்கள் 'மாக்களாகக்' கருதப்பட்ட சூழலும் அவர்களால் அச்சமூகத்திற்கு உண்டாகும் இழிவும் சங்க இலக்கியமான புறநானூற்று பாடல்களில் பதிவாக்கப்பட்டுள்ளது.

துணைநின்ற நூல்கள்


1. தொல்காப்பியம் - பொருளதிகாரம்
2. புறநானூறு மூலமும் - உரையும்
3. திருக்குறள்
4. மலரும் இந்திய சமுதாயத்தில் கல்வி – மீனாட்சி சுந்தரம்